பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .11.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 30ம் நாள் (30.11.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களின் அக்டோபர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அக்டோபர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் அக்டோபர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மணி நகர், நேதாஜி நகர், வி.பி. நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.657 நாள்.30.09.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் ரூ.1.20 லட்சத்தில் மேற்படி பணியை செய்ய 13.11.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 — திரு.எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் — 0.04% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br>2 — திரு. எம் சங்கர், ஒப்பந்ததாரர் — 0.87% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.04% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |
| பொருள்.5 | இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் அனைத்து தனியார் மற்றும் அரசு பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின் படி 2018–2019 ஓராண்டிற்கு 14.03.2018, 22.03.2018 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்திலும் ஒப்பந்தப்புள்ளியிலும் எவரும் கலந்து கொள்ள முன் வரவில்லை. அதனால் |

01.04.2018ம் தேதி முதல் அலுவலக மூலம் (துறை) வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் இந்நகராட்சி பேருந்து நிலையம் ‘‘சி’’ பிரிவிலிருந்து ‘‘பி’’ பிரிவாக தரம் உயர்த்தக் கோரி வட்டார போக்குவரத்து அலுவலகம் இராமநாதபுரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் 27.04.2018ம் தேதி வரை பேருந்து நிலையம் புதுபித்து ஆணை வரப்பெறாததால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) கும்பகோணம் த.அ.போக/கும்ப/திருச்சி/வணிகம்–1/066–1 2018 நாள்.16.02.2018ன் படி பேருந்து நிலையத்திற்குள் பேருந்து நுழைவு கட்டணம் செலுத்த தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என கடிதம் வரப்பெற்றுள்ளது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகம் இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18292/அ2/2018 நாள்.21.06.2018ன் படி இந்நகராட்சி பேருந்து நிலையம் ‘‘சி’’ பிரிவிலிருந்து ‘‘பி’’ பிரிவாக தரம் உயர்த்தப்பட்டு பேருந்து நுழைவு கட்டணம் ரூ.8ல் இருந்து 12/– ஆக உயர்த்தியும் 28.04.2018 முதல் 27.04.2019ம் ஆண்டு வரை ஓராண்டுக்கு புதுபித்து ஆணை வரப்பெற்றுள்ளது. அதன் படி 12.07.2018, 19.07.2018, 27.07.2018, 14.08.2018, 12.10.2018, 22.10.2018 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. 16.11.2018ம் தேதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (ஏழாவது அழைப்பு) கோரியதில் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. மேற்கண்ட இனத்திற்கு பல முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் பொது
பொது ஏலத்திலும் ஒப்பந்தப்புள்ளியிலும் எவரும் கலந்து கொள்ள முன் வரவில்லை 16.11.2018ம் தேதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிள (ஏழாவது அழைப்பு) அறிவிப்பை திரு. ஆர். மாணிக்கம் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் ரூ.6,20,000/– ம் கோரியுள்ளார் இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.530671/– மற்றும் சென்றாண்டு குத்தகை தொகை ரூ.556763/– ஐ காட்டிலும் திரு. ஆர் மாணிக்கம் என்பவர் கோரியுள்ள உச்ச வரம்பு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 6,20,000/–ம் கூடுதலாக உள்ளது. மேலும் ‘‘சி’’ பிரிவாக இருந்த பொழுது மூன்று முறையும் ‘‘பி’’ பிரிவாக உயர்த்திய பின் ஏழு முறையும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே மேற்படி உரிமம் ஏழாவது அழைப்பு என்பதாலும், அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாததினாலும், அலுவலக வசூலில் இழப்பு ஏற்படும் நிலையில் உள்ளதால் அலுவலக வசூலை காட்டிலும் கூடுதலாக கொடுத்துள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரப்பெற்ற குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. ஆர். மாணிக்கம்<br>த/பெ எம். ராஜப்பா பிள்ளை,<br>கே. ஆணைப்பட்டி,<br>திண்டுக்கல் மாவட்டம் | ரூ.6,20,000/– |

அலுவலகக்குறிப்பு–

மேற்கண்ட இனத்திற்கு திரு. ஆர். மாணிக்கம் என்பவர் கோரியுள்ள உச்ச வரம்பு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.6,20,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.6

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டு விபரங்களை தமிழ் நாளிதழ்களில் சிறப்பு மலராக வெளியிட மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண்.176/செமதொ/2018, நாள்.11.09.2018ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க தினகரன் நாளிதழ் சிறப்பு தொழில் மலருக்கு தொகை ரூ.25200/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>பொருள்.7</td>
<td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்கைளை கொண்டு தயாரிக்கப்படும் கலவை உரத்தினை பிளாஸ்டிக் இல்லாத பைகளைக் கொண்டு சிப்பமிட்டு உரத்தினை விற்பனை செய்துகொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் தயாரிக்கப்படும் கலவை உரத்தின் தரப்பண்புகளை ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்படி தரப்பண்புகளை சிப்பமிடும் பைகளின் பின்பகுதியில் தெரியும் வண்ணம் அச்சிடப்பட்டு 25 கிலோ மற்றும் 50 கிலோ அளவு கொள்ளும் பைகள் சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு உத்தேசமாக ரூ.1,00,000/– லட்சம் செலவினத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பிளாஸ்டி பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி பைகள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
</tr>
<tr>
<td>பொருள்.8</td>
<td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள TN 65 Z9597 ஈப்பு வாகனத்திற்கு டயர்கள் 21.12.2015ந்தேதி வாங்கி பொருத்தி சுமார் 80,000 கி.மீ ஓடி விட்டதால் டயர்கள் மிகவும் தேய்ந்து போய் உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிதாக நான்கு எண்ணம் 215/751 R5–WONDERER டயர்கள் வாங்க 14.10.2018ந் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு
<table>
<tr><td>1</td><td>M/S ரெத்னா டயர்ஸ், பரமக்குடி</td><td>ரூ.25200/–</td></tr>
<tr><td>2</td><td>M/S அமிர்தா டயர்ஸ், பரமக்குடி</td><td>ரூ.24900/–</td></tr>
</table>
<br>அலுவலக் குறிப்பு–<br>1. வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S அமிர்தா டயர்ஸ், பரமக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக் கொண்டு அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரி, உத்தரவு வழங்கி புதிதாக டயர்கள் வாங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
</tr>
<tr>
<td>பொருள்.9</td>
<td>இந்நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப் பிரிவில் இருந்த உபயோகமற்ற நிலையில் இருந்த பழைய பொருட்களை 28.11.18 ந்தேதி பொது ஏலம் விடப்பட்டதில் பொறுப்புத் தொகை ரூ. 1,00,000/– செலுத்தி 24 நபர்கள் கலந்து கொண்டதில் கீழ்க்கண்ட விவரப்படி 15 நபர்களால் ஏலம் கோரப்பட்டது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>வி.எம்.பி.ஸ்டீல்ஸ் 2/82–A<br>மேலச்சத்திரம்<br>பரமக்குடி</td><td>ரூ. 2,25,000/–</td></tr>
<tr><td>2</td><td>E. தங்கராஜன்<br>A4, கோத்தாரி நகர்<br>கோயம்புத்தூர்</td><td>ரூ. 2,16,000/–</td></tr>
<tr><td>3</td><td>ஈஸ்வரி ஸ்டீல்ஸ்<br>3/546–E மதுரை மண்டபம் ரோடு<br>பரமக்குடி</td><td>ரூ. 2,18,000/–</td></tr>
</table></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 4 | எஸ்.பி.பி. டிரேடர்ஸ்<br>290, தில்லை திடல் சந்தை<br>மதுரை | ரூ. 2,13,000/– |
| 5 | கே. ராஜேந்திரன்<br>9, பெரிய பாலம்<br>மதுரை–1 | ரூ. 2,14,000/– |
| 6 | எஸ். குமாரவேல்<br>4/68/2 எம்.ஜி,ஆர்.காலணி<br>விருதுநகர் | ரூ. 20,400/– |
| 7 | கே. சங்கரமகாலிங்கம்<br>மாரியம்மன் கோவில் தெரு<br>மானாமதுரை | ரூ. 20,3000/– |
| 8 | செல்வி ஸ்டீல்ஸ்<br>2/110 சி4 மேலச்சத்திரம்<br>பரமக்குடி | ரூ. 2,12,000/– |
| 9 | ஸ்ரீமஞ்சமாலை டிரேடர்ஸ்<br>38,சூர்யஜெயபுரம்1வது<br>செல்லூார்<br>மதுரை | ரூ.2,06,000/– |
| 10 | எம்.தங்கமணி<br>165/ டி.பி.எதிர்புறம்<br>மானாமதுரை | ரூ. 2,15,000/– |
| 11 | எம்.சுப்பிரமணியன்<br>10/373, படேல் தெரு<br>பரமக்குடி | ரூ. 2,09,000/– |
| 12 | ஆர்.தியாகராஜன்<br>1/145 மேலத் தெரு<br>காட்டுப்பரமக்குடி | ரூ. 2,10,000/– |
| 13 | எஸ்.ஜெயராமன்<br>ஜே.கே. மரக்கடை<br>மீனாம்பாள்புரம்<br>மதுரை | ரூ. 2,17,000/– |
| 14 | டி. சித்தனாதன்<br>3/22 நாகநாதபுரம்<br>வெளிப்பட்டினம்<br>இராமநாதபுரம் | ரூ. 2,13,000/– |
| 15 | ஆர். கணேசன்<br>சென்னிமலை<br>திருப்பூர் மாவட்டம் | ரூ. 2,05,000/– |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட விபரப்படி ஏலம் கோரியதில் அதிக பட்ச தொகையான ரூ. 2,25,000/– ஏலம் கோரிய வி.எம்.பி.ஸ்டீல்ஸ் பரமக்குடி நிறுவனத்திற்கு பழைய பொருட்களை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண். /2018/இ1)

2. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்.10 | இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பிரிவில் தினசரி வழங்கப்பட்டு வரும் குடிநீர் முறையாக குளோரினேசன் செய்யும் பொருட்டு பிளிச்சிங் பவுடர் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளது. எனவே குடிநீர் விநியோக பணிக்கு தேவையான பிளிச்சிங்பவுடர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் அரசு நிறுவனமாக மதுரை மாவட்ட பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி செலவினத்தை குடிநீர் பிரிவு தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.11 | இந்நகராட்சி பொது சுகாதார பாப்காட் வாகனம் TN 65 AZ 2553 க்கு 4 டயர்களும் முற்றிலும் தேய்மானம் ஆகி பழுதடைந்து மேற்கண்ட வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், அதனால் 4 புதிய டயர்கள் வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்தன் அடிப்படையில் 4 புதிய டயர்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் கணக்கிட JCB நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தரான ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸி, நென்மேனி, பரமக்குடி என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் மேற்கண்ட நிறுவனம் ரூ.50828/–க்கு விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>எனவே ரூ.55000/– உத்தேச செலவினத்தில் JCB நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தரான ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸி, நென்மேனி, பரமக்குடி என்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.55000/– உத்தேச செலவினத்தில் JCB நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தரான ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸி, நென்மேனி, பரமக்குடி என்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.12 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து வீடுகளின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் கொசுக்களின் உற்பத்தியை அழிக்க பயன்படுத்தப்படும் பைரீத்திரம் 2 % எக்ஸ்ட்ராக்ட் என்ற வகை மருந்து களப்பணி உதவியாளரின் அறிக்கையின் படி அலுவலக இருப்பில் 97 லிட்டர் மட்டுமே இருப்பில் உள்ளதாகவும் மேற்கண்ட மருந்து 1 மாத காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும், பைரீத்திரம் 2 % எக்ஸ்ட்ராக்ட் – 200 லிட்டர் என்ற மருந்தினை நகர் மன்றத்தின் பின்னேற்பினை எதிர் நோக்கி தனிஅலுவலர் அவர்களின் 15.11.2018ம் தேதிய முன் அனுமதியின் படி தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.2.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலர் அவர்களின் 15.11.2018ம் தேதிய முன் அனுமதியின் படி தமிழ்நாடு மருத்துவ<br>சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.2.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

| | |
|---|---|
| | 3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| பொருள்.13 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து வீடுகளில் தண்ணீர் சேமித்து வைக்கும் கலன்கள், தண்ணீர் தொட்டிகளில் கொசுக்களின் உற்பத்தியை அழிக்க பயன்படுத்தப்படும் டெமிபாஸ் 50% EC என்ற வகை மருந்து களப்பணி உதவியாளரின் அறிக்கையின் படி அலுவலக இருப்பில் 98 லிட்டர் மட்டுமே இருப்பில் உள்ளதாகவும் மேற்கண்ட மருந்து 1 மாத காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும், டெமிபாஸ் 50% EC – 200 லிட்டர் என்ற மருந்தினை தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.1.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் நேரடியாக கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைட்<br>லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.1.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் நேரடியாக கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.14 | பரமக்குடி நகராட்சி 2018–2019ஆம் ஆண்டு முதுல் மறு நிர்ணயம் செய்யப்பட் D&O உரிமையாணைக் கட்டண உயர்வு விபரத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–த்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு D&O<br>உரிமையாணைக் கட்டணம் உயர்வு செய்வதை தெரிவிக்கும் பொருட்டு மன்றபொருள் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் குருநாதன் கோவில் , குருநாதன் கோவில் கிழக்கு, கீழ வீதி வடக்கு பகுதியில் உள்ள தெரு மிகவும் மேடு பள்ளமாக உள்ளதால் அப்பகுதி மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூராக உள்ளதாலும், அப்பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் வடிகால் மிகவும் பழுதடைந்து கழிவு நீர் தேங்கி நின்று சுகதாரக் கேடு விளைவிக்க வாய்ப்புள்ளதாலும், பொது மக்கள் நலன் கருதி மேற்படி தெருவில் பேவர் கல்தளம் சிறுபாலம் மராமத்துபணி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.10 லட்த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| பொருள்.16 | இந்நகராட்சி வார்டு எண்.29ல் ஆஸ்பத்திரி சாலை சிறுவர் பூங்கா பின்புறம் நகராட்சிக்கு செந்தமான காலியிடம் உள்ளது. மேற்படி காலியிடத்தின் தென்புறம் உழவர் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட் அமைந்துள்ளது. இந்நிலையில் மேற்கண்ட காலியிடத்தில் தனியார் வாகனங்களை நிறுத்தியும், அப்பகுதி பொது மக்கள் குப்பைகளை கொட்டியும், அசுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் அப்பகுதி மக்கள் மற்றும் சிறுவர் பூங்காவிற்கு வந்து செல்லும் பொது மக்களுக்கும் சுகாதாரகேடு விளைவிக்கும் வாய்ப்பு உள்ளதால் பொது மக்கள் நலன்கருதி மேற்படி காலியிடத்தில் திறந்தவெளி கடைகள் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| பொருள்.17 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட முதுவை டிம்பர் மேற்கு, எல்.ஐ.சி பின்புறம், மேலச்சத்திரம், சிங்காரத்தோப்பு மற்றும் முல்லை நகர் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா அமைவிடங்கள் உள்ளது. அவற்றை பாதுகாக்கும் பொருட்டு வேலி அமைத்து பெயர் பலகைகள் பொருத்த உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | பரமக்குடி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரி சாலை, உழவர் சந்தை பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 5 TPD கொள்ளளவுள்ள நுண்ம கூட்டு மையம் ரூ.72.70 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 03.09.2018ல் முதன்மை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரேட் கொடுத்துள்ள திரு.எம்.சங்கர் என்பவருக்கு 07.11.2018 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணியை 14.11.2018 அன்று துவங்கப்பட்டு பணி நடைபெற்று வருகையில் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் சார்பாகவும் சே.சந்தியாகு என்பவரும் மற்றும் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தினர் மேற்படி இடத்தினை சுற்றிலும் குடியிருப்புகள் உள்ளதால் நுண்ம கூட்டு மையம் அமைக்க கூடாது என மறுப்பு தெரிவித்துள்ளனர்.மேலும் மண்டல செயற்பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களும் நுண்ம கூட்டு மையம் அமைக்கப்பட உள்ள இடத்தை 15.11.2018 அன்று நேராய்வு செய்துள்ளனர். இது குறித்து தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. மேற்படி பகுதி பொது மக்கள் பரமக்குடி சார் ஆட்சியர், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் நேரடியாக மனு அளித்துள்ளனர். இப்பகுதி பொது மக்களின் ஆட்சேபனையினை எதிர்த்து பணி செய்ய முற்பட்டால், சட்டம் ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்புண்டு. எனவே மேற்கண்ட திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியதன் அவசியத்தினை கருதினை மாற்று இடமாக வாரச்சந்தை வளாகத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே தேர்வு செய்த உழவர் சந்தை வளாகத்திற்கு பதிலாக வாரச்சந்தை வளாகத்திற்குள் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்படி பணி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணியாக உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் திருத்திய நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் மேல் நடவடிக்கைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.23.11.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 23ம் நாள் (23.11.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள்கள்**

பொருள்.1

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது உபயோக பகுதிகளான பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் ,திறவிடங்கள் மற்றும் சிறுவர்பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் போன்றவைகளை அபிவிருத்தி செய்யவும், இதன் பொருட்டு நகல் ஊரமைப்புதுறையால்நகராட்சிக்காக ஒதுக்கப்படட இடங்கள், பூங்காக்கள் Tamilnadu parks Play - Fields and Open Space 1959 சட்டத்தின்படி அரசிதழில் பிரசுரம் செய்ய முடிவு செய்யப்பபட்டுள்ளது.

| வ. எ ண் | மனைப்பிரிவு எண் | சர்வே எண் | பூங்கா | விளையாடும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 75/56 பொன்னையாபுரம் | 128 | உள்ளது | |
| 2 | 95/60 ஜீவா நகர் எமனேஸ்வரம். | 251/1,2.3252/7B,5பகுதி2 50/4,5,6,249/2,3,4,&8 | உள்ளது | உள்ளது |
| 3 | 67/63 காட்டுப்பரமக்குடி (ஆதி திராவிடர் மனைப்பிரிவு) | 79/1A,80/12 | உள்ளது | உள்ளது |
| 4 | 2/72 பாரதி நகர் | 94/1B4,22B | உள்ளது | |
| 5 | 5/73 மணி நகர் | 55,58/1,2 | உள்ளது | உள்ளது |
| 6 | 22/73 எமனேஸ்வரம் | 248/3 | உள்ளது | உள்ளது |
| 7 | 22/76 எமனேஸ்வரம் | 94/2 | | உள்ளது |
| 8 | 5/77 எமனேஸ்வரம் | 260/11 | | உள்ளது |
| 9 | 14/77 காட்டுப்பரமக்குடி | 40/3 | உள்ளது | |
| 10 | 8/75 பர்மா காலனி | 270/2 | | 416 ச.மீ |
| 11 | 7/78 ஓட்டப்பாலம் | 87 | உள்ளது | |
| 12 | 35/79 வேந்தோணி | 366/1B | 202.சமீ | |
| 13 | 21/80 சிங்காரத்தோப்பு | 544/85 | உள்ளது | உள்ளது |
| 14 | 56/81 பாலன் நகர் | 156/1A பகுதி | உள்ளது | |
| 15 | 79/81 வி.பி.காலனி, மணிநகர் | 58/3 | உள்ளது | |
| 16 | 90/81 காட்டுப்பரமக்குடி (பஞ்சாயத்து யூனியன் ஆபிஸ் அருகில்) | 60/40, 60/6 & 58/6B பகுதி | | 240.50ச.மீ |
| 17 | 19/82 பாரதி நகர் (எல்.ஐ.சி) அருகில் | 90/2B பகுதி | | 150.சமீ |
| 18 | 40/82 எமனேஸ்வரம் | 27/1 | 60ச.மீ | |
| 19 | 57/82 எமனேஸ்வரம் | 247/1B | 90ச.மீ | |
| 20 | 55/82 எமனேஸ்வரம் | 248/1, 249/6பகுதி 7&9 | உள்ளது | |
| 21 | 55/82 காட்டுப்பரமக்குடி | 74/2 பகுதி | உள்ளது | |
| 22 | 58/82 காட்டுப்பரமக்குடி | 60/5 & 60/8 | உள்ளது | |
| 23 | 89/82 எமனேஸ்வரம் | 249/2,3,4,8 250/4,5,6 | 1030ச.மீ | 1960ச.மீ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 251/1,2,3 252/7B5 பகுதி | | |
| 24 | 37/83 பாரதி நகர் (எல்.ஐ.சி. அருகில்) | 92/4 | 560ச.மீ | |
| 25 | 63/83 சிங்காரத்தோப்பு | 33/4C | 515ச.மீ | |
| 26 | 64/83 காட்டுப்பரமக்குடி (ஹரிஜன காலனி அருகில்) | 74/2 பகுதி | | 232ச.மீ |
| 27 | 66/83 பாரதி நகர் (எல்.ஐ.சி.பின்புறம்) | 92/2 | 131ச.மீ | |
| 28 | 91/84 பாரதி நகர் மேற்கு | 90/1 A பகுதி | | 345ச.மீ |
| 29 | 5/85 பாரதி நகர் மேற்கு | 86/3 | 335ச.மீ | |
| 30 | 8/85 பொன்னையாபுரம் | 130/1B, 2B 131/1A | 768ச.மீ | |
| 31 | 21/86 சேதுபதி நகர் | 60/7 | 239.90ச.மீ | |
| 32 | 1/05 புதுநகர் | 68/1,2,3,4 | 1261.10ச.மீ | 1291.5ச.மீ |
| 33 | 416/2008 வி.பி.காலனி எமனேஸ்வரம் | E/3/14/1பகுதி | 502.76 ச.மீ | |
| 34 | 515/2018 புதுநகர் | B/3 /6/3 | 288.73 ச.மீ | |
| 35 | 307/2018 புதுநகர் | B/3 /126/5,126/6 | 79.47 ச.மீ | |
| 36 | 364/2018 புதுநகர் | B1/11/8 | 60.94 ச.மீ | |
| 37 | 450/2018 புதுநகர் | B4/6/7 பகுதி | 91.44 ச.மீ | |
| 38 | 577/2018 புதுநகர் | C1/3ன் பகுதி | 321.30 ச.மீ | |
| 39 | 760/2018 புதுநகர் | B2/3/18 | 43.70 ச.மீ | |
| 40 | 653/2018 திருவள்ளுவர் நகர் | H 36/4ன் பகுதி | 267.56 ச.மீ | |
| 41 | 605/2018 புதுநகர் | C1/1ன் பகுதி | 2658.00 ச.மீ | |
| 42 | 639/2018 புதுநகர் | C1/ 2/4 | 292.78 ச.மீ | |
| 43 | 721/2018 புதுநகர் | B1/11ன் பகுதி | 23.41 ச.மீ | |
| 44 | பாரதியார் பூங்கா | G 9/34 | 2065ச.மீ | |
| 45 | சுதந்திர தின பூங்கா | G 7/27 | 1632 ச.மீ | |
| 46 | சிறுவர் பூங்கா | | 3265 ச.மீ | |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

பொருள்.2

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47718/2018/UGSS/2 நாள்.14.09.2018ல் தெரிவித்துள்ளவாறு, பரமக்குடி நகரில் உற்பத்தியாகும் 40 KLD Fecal Sludge ஐ சுத்திகரிப்பு செய்ய நகராட்சிக்கு சொந்தமான உரப்புளி கிராமம் சர்வே எண்.1/1, 3, 4, 193 மற்றும் 198ல் உள்ள 28.20 ஏக்கர் நிலத்தில் Fecal Sludge and Septage Management திட்டத்தின் கீழ் Fecal Sludge Treatment Plant அமைக்க மதிப்பீடு ரூ.565 .00 லட்சத்திற்கு (ரூபாய் ஐநூாற்று அறுபத்து ஐந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் அரசு முழு மான்யம் கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் பார்வைக்கும், மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்.3 | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் எதிர்புறம் மதுரை–இராமேஸ்வரம் சாலையில் பூ வியாபாரிகள் தற்காலிகமாக பூக்கடை நடத்தி வந்த நிலையில் போக்குவரத்திற்கு இடையூறு மற்றும் பொது மக்களுக்கு உயிர்சேதம் தவிர்க்கும் பொருட்டு சாலை பாதுகாப்பு கருதி மேற்கண்ட இடத்தில் தற்காலிகமாக நடத்திவந்த பூக்கடையை ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்தப்படும்போது, அப்புறப்படுத்தப்பட்டதால் பூ வியாபாரத்தை நம்பி பிளைப்பு நடத்தி வந்தோம் என்றும் தற்பொழுது கடையை காலி செய்ததால் வாழ வழியின்றி தவிப்பதாகவும், நாங்கள் வாழ வழிவகை செய்ய பேருந்து நிலையத்தின் மேல்புறம் உள்ள காலியிடத்தில் 13 வியாபாரிகளுக்கும் பூக்டை மட்டும் நடத்திக் கொள்ள தற்காலிக தரை வாடகைக்கு வாங்க அனுமதிக்குமாறு 17.10.2018ம் தேதி கடிதம் கொடுத்துள்ளார்கள்.<br><br>அதன் படி மேற்குறிப்பிட்டுள்ள இடத்தினை பரமக்குடிச ார் ஆட்சியர் அவர்கள் நேராய்வு செய்து 13 வியாபாரிகளுக்கும் பேருந்து நிலையத்திற்குள் காலியிடம் ஒதுக்கி கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் பேரில் மேற்கண்ட வியாபாரிகளுக்கு தற்காலிகமாக காலியிடம் ஒதுக்கீடு செய்ய குத்தகை விதிகளின் படி பொது ஏலம் கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br><br>மேற்படி காலியிடத்தில் குத்தகை விதிகளின்படி அரசாணை (நிலை) 92 நகராட்சி நிர்வாக. மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ன் படி பொது ஏலம் மூலம் மேற்படி பூ வியாபாரிகளுக்கு அவர்களின் குடும்ப வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டும் 5 x 4 அளவில் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் உட்பகுதியில் உள்ள காலியிடத்தில் தற்காலிகமாக கடைகள் நடத்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி